# வெற்றிடங்கள்

## தகவல் அறியும் உரிமை பற்றிய ஆணைக்குழு

## (2016 இல.12 தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது)

### சிரேஷ்ட ஆய்வு அதிகாரி

தகவலறியும் உரிமை பற்றிய ஆணைக்குழுவில் சிரேஷ்ட ஆய்வு அதிகாரி பதவிக்காக கீழ்க்காணும் தகைமைகள் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் சுற்றுநிருப இல.02/2016 இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**தகைமைகள்**

**வெளி விண்ணப்பதாரிகள் (கீழ்க்காணும் 1 அல்லது 2)**

01. சமூக விஞ்ஞானம், ஊடகம் அல்லது சட்டம் பற்றிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விசேடமாணி பட்டம்.

**அத்துடன்**

குறித்த துறையில் ஆய்வுகளுடன் சம்பந்தப்பட்ட பட்டப்பின் படிப்பு பட்டம் (Masters) பெற்றிருத்தல்

**மற்றும்**

ஆரம்ப பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் குறைந்தபட்சம் எட்டு வருட (08) ஆய்வு அனுபவம் பெற்றிருத்தல்.

02. சமூக விஞ்ஞானம், ஊடகம் அல்லது சட்டம் பற்றிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விசேடமாணி பட்டத்துடன் குறித்த துறையில் கலாநிதி பட்டம் (PHD)

**மற்றும்**

ஆரம்ப பட்டத்தை பெற்றுக்கொண்ட பின்னர் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் ஐந்து வருட (05) ஆய்வு அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்ளக விண்ணப்பதாரிகள் (கீழ்க்காணும் 1அல்லது 2 அல்லது 3)**

01. மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், ஊடகம் அல்லது சமூக விஞ்ஞானத்துறை பற்றிய விசேடமாணி/சாதாரண பட்டம்

**அத்துடன்**

சட்டம், ஊடகம் அல்லது சமூக விஞ்ஞானத்துறை பற்றிய பட்டப்பின் படிப்பு பட்டம் (Masters) பெற்றிருத்தல்

**மற்றும்**

கல்வி/ஆய்வு சேவை வகுதியில் (ARI) பதவியொன்றில் குறைந்த பட்டம் எட்டு(08) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

03. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், ஊடகம் அல்லது சமூக விஞ்ஞானத்துறை பற்றிய விசேடமாணி/ சாதாரண பட்டம்.

**அத்துடன்**

குறித்த துறையில் சட்டம், ஊடகம் அல்லது சமூக விஞ்ஞானத்துறையில் கலாநிதி பட்டம் (PHD) பெற்றிருத்தல்.

**மற்றும்**

"கல்வி /ஆய்வு" சேவை (ARI) வகுதியில் பதவியொன்றில் குறைந்த பட்சம் (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

**வயது** : 30 வருடத்திற்கு குறையாத மற்றும் 55 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**சம்பள முறை** : AR2-2016 ரூ.(76,200-10X2,000-96,200)

**சேர்த்துக்கொள்ளும் முறைமை**

கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு

| | | |
|---|---|---|
| 01. | கல்வித் தகைமைகள் (அடிப்படை தகைமைகளுக்கு மேலதிகமாக) | 30 புள்ளிகள் |
| 02. | ஆய்வு அலுவலகம் | 10 புள்ளிகள் |
| 03. | வெளியீடு, பேடன்ட் அனுமதிப்பத்திரம் மற்றும் வழங்கல்கள் | 20 புள்ளிகள் |
| 04. | விடயத்திற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள் | 10 புள்ளிகள் |
| 05. | ஆளுமை | 15 புள்ளிகள் |
| 06. | குறித்த துறை பற்றிய சாதாரண அறிவு | 15 புள்ளிகள் |
| | மொத்தப்புள்ளிகள் | 100 புள்ளிகள் |

விண்ணப்பதாரிகள் தம்மைப்பற்றிய தகவல்களை விசாரிக்கக் கூடிய பொறுப்புடைய நபர்கள் இருவரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொ. பே.இலக்கத்துடன் தமது கல்வி மற்றும் தொழில்சார் அனுபவம் பற்றிய விபரப் பத்திரமொன்றை (CV) 2025.02.24 அல்லது அதற்கு முன்பு கீழே குறிப்பிடும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தலைவர், தகவலறியும் உரிமைகள் பற்றிய ஆணைக்குழு, அறை இல.203-204, கட்டிட இல 02, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகம், கொழும்பு - 07.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுவர்.

**ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,**
**பணிப்பாளர் நாயகம்**
**தகவலறியும் உரிமைகள் பற்றிய ஆணைக்குழு**